செ.கு.எண்: 352

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 27.9.2012

சென்னை, திரு.வி.க. நகர், மதுரைசாமி மடம், மரியநாயகம் பிரதான சாலை சந்திப்பு இடத்தில் கழிவு நீர் பாதாள சாக்கடையில் ஏற்பட்ட அடைப்பினை சரி செய்யும் பணியில் 26.9.2012 அன்று ஈடுபட்டிருந்த சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தின் பகுதி அலுவலகத்தைச் சேர்ந்த தினக்கூலிப் பணியாளர் திரு. சங்கர் விஷவாயு தாக்கி பாதாள சாக்கடையில் விழுந்து உயிரிருக்குப் போராடிய நிலையில், அவரை காப்பாற்ற முயன்ற இளநிலைப் பொறியாளர் திரு. வெங்கட்டரமணனும் பாதாள சாக்கடையில் தவறி விழுந்ததில் இருவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தின் இளநிலைப் பொறியாளர் திரு. வெங்கட்டரமணன் மற்றும் தினக்கூலி பணியாளர் திரு. சங்கர் ஆகிய இருவரும் பணியில் இருக்கும் போது உயிரிழந்தனர் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. இந்த விபத்தில் அகால மரணமடைந்த திரு. வெங்கட்டரமணன் மற்றும் தினக்கூலி பணியாளர் திரு. சங்கர் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. வெங்கட்டரமணன் மற்றும் திரு. சங்கர் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை.